# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

# OS. No.302/2019

**11.09.2025**

## P.W.1- படிவு

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 மற்றும் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் வழக்கு சொத்து என் சொத்து என்று கேட்டு பிராது தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் விஸ்தீரணம், சர்வே எண் பற்றி என்றால் தெரியாது. வழக்கு சொத்து உடன்காட்டுப்பட்டியில் உள்ளது. பிராது தாக்கல் செய்ய விவரம் நான் தான் சொன்னேன். 1ம் பிரதிவாதி பாண்டி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கண்ட விவரங்களை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் புல எண்.14-1 என்பது சரியா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் புல எண்ணில் விஸ்தீரணம் 0.23.5 ஏர்ஸ் என்றாலும், அதற்கு சமமாக 58 சென்டு இடம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி 58 சென்டு நிலமானது ஆதியில் படிவு (எ) மாஞ்சிபடிவு, படிவு (எ) கிழவன்படிவு மற்றும் வீரணன் ஆகியோர்களுக்கு பாத்தியமானது என்றால் சரிதான். மேற்படியார்கள் மூவரும் சுப்புத்தேவர் மற்றும் சிவனம்மாளின் பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி மூவரும் தலா 19.30 சென்டு நிலத்தை சரிசமமாக பிரித்துக்கொண்டனர் என்றால் சரிதான். படிவு (எ) மாஞ்சித்தேவருக்கு பெருமாள்தேவர் மற்றும் பூச்சித்தேவர் என இரண்டு மகன்கள் என்றால் சரிதான். மேற்படி பெருமாள்த்தேவருக்கு கருப்பத்தேவர் மற்றும் அய்யாவுத்தேவர் என இரண்டு மகன்கள் என்றால் சரிதான். கருப்பத்தேவருக்கு பழனி மற்றும் நீதிராஜா என்று இரண்டு மகன்கள் என்றால் சரிதான். அய்யாவுத்தேவருக்கு தர்மராஜ் மற்றும் நல்லதம்பி என இரண்டு மகன்கள் என்றால் சரிதான். படிவு (எ) மாஞ்சிபடிவு மகன் பூச்சித்தேவருக்கு முத்தனத்தேவர் என்ற ஆண்பிள்ளையும், கருப்பாயி என்ற பெண் பிள்ளையும் ஆவார்கள் என்றால் சரிதான். படிவு (எ) கிழவன்படிவிற்கு படிவு, பெருமாள் மற்றும் மாயாண்டி ஆகிய மூன்று மகன்கள் என்றால் சரிதான். மேற்படி மூத்த மகன் படிவு என்பவருக்கு படிவு, தங்கராஜ் என இரண்டு மகன்கள் என்றால் சரிதான். பெருமாள் என்பவருக்கு அவரது

மனைவி கருப்பாயி மூலம் மாயாண்டி என்ற மகன் உண்டு என்றால் சரிதான். மேற்படி மாயாண்டிக்கு ராஜு, பெருமாள், கூல்மாயன் என மூன்று மகன்கள் என்றால் சரிதான். படிவு (எ) கிழவன்படிவின் 3வது மகன் மாயாண்டி என்பவருக்கு திரவியம் என ஒரு மகன் உண்டு என்றால் தெரியாது. மாயாண்டிக்கு எத்தனை பிள்ளைகள் என்று தெரியாது. மாயாண்டிக்கு திரவியம் என்ற பிள்ளை இருந்தாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திரவியத்திற்கு கருப்பத்தேவர் என ஒரு மகன் உண்டு என்றால் கருப்பத்தேவர் என்ற நபர் உண்டு, அவர் திரவியத்தின் மகன் என்று தெரியவில்லை. வீரணன் என்பவருக்கு நல்லு மற்றும் அய்யர் என்று இரண்டு மகன்கள் என்றால் சரிதான். நல்லுவிற்கு பிச்சைத்தேவர் மற்றும் படிவு என இரண்டு ஆண்பிள்ளைகள் என்றால் சரிதான். பிச்சைத்தேவருக்கு 1 மற்றும் 3வது பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். 2வது பிரதிவாதி, 1வது பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரி என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் நல்லுத்தேவர் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு பார்வதியம்மாள் மற்றும் முத்தம்மாள் என்று இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். மேற்படியார்களின் பார்வதியம்மாள் முதல் மனைவி மற்றும் முத்தம்மாள் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். பிராதில் நல்லுத்தேவரின் முதல் மனைவியின் பெயர் சிவனம்மாள் என தவறாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 11.06.1970ம் தேதிய எழுதிய ஒரு கிரையஆவணத்தில் நல்லுத்தேவரின் குமாரரும், மேற்படியாரின் முதல் தாரம் பார்வதியம்மாள் மகன் பிச்சைத்தேவர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் நல்லுத்தேவர் இளையதாரம் முத்தம்மாளின் மகன் படிவு என்றால் நான்தான். நல்லுத்தேவரின் முதல் தாரம் பார்வதியம்மாள் மூலம் அவருக்கு பிச்சைத்தேவர், சீனியம்மாள் மற்றும் முத்துபெருமாயி என மூன்று பிள்ளைகள் உண்டு என்றால் சரிதான். நல்லுத்தேவரின் மகன் பிச்சைத்தேவரின் மனைவி பெயர் பேச்சியம்மாள் என்றால் சரிதான். மேற்படி பிச்சைத்தேவர் மற்றும் பேச்சியமாளுக்கு முனியம்மாள், பாண்டி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். நல்லுத்தேவரின் மகள் சீனியம்மாளுக்கு பேச்சியம்மாள், சிவனம்மாள், ராஜா, செல்வம் மற்றும் ஜெயராணி என 5 மக்கள் என்றால் சரிதான். சீனியம்மாள் மகள் சிவனம்மாள் அவரது மகன் சுரேஷ் மற்றும் மகள்

சுகன்யா ஆகியோர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். நல்லுத்தேவரின் மகள் முத்துபெருமாயிக்கு செல்வராஜ், சந்தனம், சேகர் மற்றும் மின்னல்கொடி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படியார்களில் சீனியம்மாள் மற்றும் முத்துபெருமாயி ஆகியோர்களை நான் தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். முத்துபெருமாயிக்கு சேகர் என்ற மகன் இருந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சேகரின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நல்லுத்தேவருக்கு இரண்டாவது மனைவி முத்தம்மாள் மூலம் நானும், 4ம் பிரதிவாதி பாப்பு என்பவரும் வாரிசுகள் என்றால் சரிதான். நல்லுத்தேவரின் வாரிசுகள் அனைவரையும் வாரிசுகளாக சேர்க்காததால் அவசியமான கட்சிக்காரர்களை சேர்க்காத தோஷத்திற்கு பிராது உள்ளாகும் என்றால் சரியல்ல. பிராதில் கண்ட புல எண்ணில் உள்ள 58 செண்டிற்கு சுப்பத்தேவரின் வாரிசுகள் அனைவரது பெயரிலும் பட்டா எண்.764ல் பட்டா வழங்கப்பட்டது என்றால் வழங்கப்படவில்லை. பட்டா எண்.764ல் சுப்பத்தேவரின் வாரிசுகள் பெயரில் கூட்டுப்பட்டா வழங்கப்பட்டது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.11 17:23:55 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.